


**25. 06. 2026**

## தலைப்புச் செய்திகள்

1. தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் சார்பில் 300 புதிய பேருந்துகளின் சேவையை முதலமைச்சர் திரு. விஜய் இன்று சென்னையில் தொடங்கிவைத்தார்.

2. தமிழகத்தில் இந்தாண்டு மின் கட்டணம் உயர்த்தப்பட மாட்டாது என்று மாநில மின்துறை அமைச்சர் திரு. நிர்மல்குமார் அறிவித்துள்ளார்.

3. உலகளாவிய டிஜிட்டல் மின் திட்டங்களுக்கான வலுவான அடித்தளத்தை இந்தியா ஏற்படுத்தியுள்ளதாக மத்திய மின்துறை அமைச்சர் திரு. மனோகர் லால் கூறியுள்ளார்.

4. போதை பொருள் தடுப்பு விழிப்புணர்வு பேரணி தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இன்று நடைபெற்றது.

5. ஐ.சி.சி உலக கோப்பை மகளிர் 20-20 கிரிக்கெட் போட்டியில் மான்செஸ்டரில் இந்தியா இன்று பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

**************

முதலமைச்சர்

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் சார்பில் 300 புதிய பேருந்துகளின் சேவையை முதலமைச்சர் திரு.விஜய் சென்னை தலைமை செயலகத்திலிருந்து இன்று தொடங்கிவைத்தார்.

127 கோடியே 21 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் சென்னை உட்பட 6 கோட்டங்களுக்கு இப்பேருந்துகள் இயக்கப்பட உள்ளன.

164 டீசல் பேருந்துகள் மற்றும் 136 சி.என்.ஜி பேருந்துகள் இதில் அடங்கும்.

இதனிடையே முதலமைச்சரை இந்தியன் வங்கியின் மேலாண் இயக்குனர் மற்றும் தொழில்துறை தலைவர்கள் சந்தித்து பேசினர்.

**************

நிர்மல்குமார் வெள்ளையறிக்கை

தமிழ்நாட்டில் இந்தாண்டு மின் கட்டணம் உயர்த்தப்பட மாட்டாது என்று மாநில மின்துறை அமைச்சர் திரு.நிர்மல்குமார் தெரிவித்துள்ளார்.

சென்னையில் தமிழ்நாடு மின்வாரிய வெள்ளை அறிக்கையை இன்று வெளியிட்டு பேசிய அவர், விவசாயிகளுக்கான இலவச மின்சார திட்டமும், கைத்தறி நெசவாளர்களுக்கான மின் சலுகைகளும் தொடரும் என்றும் தெரிவித்தார்.

வரும் ஆண்டுகளில் மின்துறை படிப்படியாக மேம்படுத்தப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

கடந்த ஆட்சியில் மின்துறைக்கான 9 ஒப்பந்தபுள்ளிகளில் ஆயிரத்து 28 கோடி ரூபாய் ஊழல் கண்டறியப்பட்டுள்ளதாகவும்

சந்தேகத்திற்குட்பட்ட டெண்டர்கள் நிறுத்திவைக்கப்படும் என்றும் கூறினார்.

தமிழக மின்வாரியத்தின் மொத்த கடன் 2 லட்சத்து 47 ஆயிரம் கோடியாக உள்ளது என்று கூறிய அவர், தமிழ்நாட்டிற்கு அதிகபட்சமாக 21 ஆயிரத்து 300 மெகாவாட் மின்சாரம் தேவை என்றார்.

தமிழ்நாடு மின்வாரியம் மூலமாக மூவாயிரத்து 495 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுவதாகவும்,

மத்திய தொகுப்பிலிருந்து 13 ஆயிரத்து 566 மெகாவாட் மின்சாரம் வாங்கப்படுவதாகவும் கூறினார்.

தமிழக மின்வாரியத்தில் முதற்கட்டமாக 15 ஆயிரம் பேர் இந்தாண்டிற்குள் பணியில் சேர்க்கப்படுவார்கள் என்று கூறிய அவர், 2021-ம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்தாயிரத்து 391 கேங்மென் இந்தாண்டு வேலையில் பணியமர்த்தப்படுவார்கள் என்றார்.

மின்வாரியத்தில் விரைவில் ஆய்வு மற்றும் மேம்பாட்டு பிரிவு தொடங்கப்படும் என்றார்.

மின் வாரிய ஊழியர்களுக்கான பதவி உயர்வு இனி உரிய காலத்தில் முறைப்படி வழங்கப்படும் என்று கூறிய அமைச்சர் மின்வாரிய ஊழியர்கள் பணியிட மாற்றத்திற்கு ஆண்டுக்கு இரண்டு முறை கலந்தாய்வு நடத்தப்படும் என்றார்.

மின்துறைக்கு அடுத்த நான்காண்டுகளுக்கு 43 ஆயிரத்து 855 கோடி ரூபாய் தேவை,

அடுத்த நான்காண்டுகளில் மேலும் 238 புதிய துணை மின் நிலையங்கள் அமைக்கப்படும் என்றார்.

சென்ற நிதியாண்டில் மின்வாரிய வருவாய் ஒரு லட்சத்து 23 ஆயிரத்து 72 கோடி ரூபாய்,

செலவு ஒரு லட்சத்து 24 ஆயிரத்து 4 கோடி ரூபாய்,

நிதி பற்றாக்குறை 933 கோடி ரூபாய்

மின் வாரிய கடன் 87 ஆயிரத்து 399 கோடி ரூபாய் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நடப்பு நிதியாண்டிற்கான வருவாய் ஒரு லட்சத்து 43 ஆயிரம் கோடி ரூபாய் என்றும்,

செலவு ஒரு லட்சத்து 41 ஆயிரம் கோடி என்றும் கணக்கிடப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

நடப்பாண்டு 11 ஆயிரத்து 893 கோடி கடன் வாங்க முடிவு செய்யப்பட்டள்ளதாக தெரிவித்த அவர் மத்திய மின் தொகுப்பிலிருந்து கூடுதல் மின்சாரத்தை பெறும் வகையில் மின் கட்டமைப்பை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

அடுத்து வரும் ஒரு சில ஆண்டுகளில் மின்வாரியத்தை முழுமையாக சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறிய அவர், நீண்டகால கொள்முதல் ஒப்பந்தம் மூலம் மின்வாரிய செலவை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

தமிழக மின்வாரியத்திற்கு ஒரு லட்சத்து 40 ஆயிரம் பணியாளர்கள் தேவைப்படும் நிலையில் தற்போது 74 ஆயிரத்து 714 பேர் மட்டுமே பணியில் உள்ளதாக அமைச்சர் கூறினார்.

வாய்ஸ்

**************

மனோகர் லால்

எரிசக்தி கட்டமைப்பில் பிரிக்ஸ் நாடுகளின் ஒத்துழைப்பின் தேவையை மத்திய மின்துறை அமைச்சர் திரு. மனோகர் லால் வலியுறுத்தியுள்ளார்.

ஹரியானா மாநிலம் குருகிராமில் பிரிக்ஸ் எரிசக்தி அமைச்சர்களின் 11 ஆவது கூட்டத்தில் இன்று துவக்க உரையாற்றிய அவர், நிலையான மலிவான சார்பு தன்மையுடைய எரிசக்தி, வளர்ச்சிக்கான இலக்குகளை எட்ட, வழிவகை செய்யும் என்றார்.

நாட்டின் முழுமையான எரிசக்தி விநியோக சங்கிலியில் பெறப்பட்டுள்ள முதலீடுகளை எடுத்துரைத்த அமைச்சர் உலகளாவிய பிரம்மாண்டமான மின்னணு சார்ந்த மின்சார திட்டங்களை செயலாற்ற இந்தியா வலுவான அடித்தளத்தை ஏற்படுத்தியுள்ளதாக குறிப்பிட்டார்.

நாட்டில் இதுவரை 6 கோடிக்கும் அதிகமான ஸ்மார்ட் மீட்டர்கள் பொருத்தப்பட்டிருப்பதாகவும், இது சார்ந்த மாற்றங்கள் வரும் ஆண்டுகளில் தொடரும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

**************

பிரதமர்

நாட்டின் அவசர நிலை பிரகடண காலத்தில் ஜனநாயக மதிப்பீடுகளுக்கு வலுவான குரல் கொடுத்த அனைவருக்கும் அஞ்சலி செலுத்துவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

அவசர நிலை பிரகடணப்படுத்தப்பட்ட இத்தினம் அரசியல் சாசன படுகொலை தினமாக இன்று கடைபிடிக்கப்படுவதை ஒட்டி பிரதமர் வெளியிட்டுள்ள செய்தியில், இந்திய வரலாற்றில் இக்காலம் ஒரு கருப்பு அத்தியாயம் என்று குறிப்பிட்டார்.

நாட்டின் அரசியல் சாசனத்திற்கு விடுக்கப்பட்ட நேரடி தாக்குதல் இது என்று கூறிய அவர், கருத்து சுதந்திரம், தனி நபர் சுதந்திரத்தை முடக்கியதோடு, அரசியல் தலைவர்கள், பத்திரிக்கையாளர்கள், சமூக பணியாளர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டதாக சுட்டிக்காட்டினார்.

அவசர நிலை காலம் எண்ணற்ற மக்களின் அளப்பரிய துணிச்சலை வெளிப்படுத்தியதாக கூறியுள்ள பிரதமர், 140 கோடி இந்தியர்களின் சமுத்துவம், உரிமைகள், கடமைகள், விருப்பங்களை பாதுகாக்க இந்தியா உறுதிபூண்டுள்ளதாக எடுத்துரைத்தார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா விடுத்துள்ள செய்தியில் ஜனநாயகத்தை காப்பதற்காக அவசர நிலையை எதிர்த்து உறுதியாக போராடிய வீரர்கள் அனைவரையும் தலை வணங்குவதாக கூறியுள்ளார்.

**************

போதை பொருள்

சர்வதேச போதை பொருள் ஒழிப்பு தினம் நாளை கடைபிடிக்கப்படுவதை ஒட்டி தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் இன்று விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

மயிலாடுதுறை மாவட்டம் திருக்கடையூரில் நடைபெற்ற பேரணியில் ஏராளமான அரசு மேல்நிலைப்பள்ளி மாணாக்கர் பங்கேற்றனர்.

இதுதொடர்பாக நடத்தப்பட்ட கட்டுரை போட்டியில் வெற்றி பெற்ற மாணாக்கருக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

விருதாச்சலத்தில் நடைபெற்ற போதை ஒழிப்பு பேரணியில் 400க்கும் மேற்பட்ட மாணாக்கர் விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தியவாறு கலந்துகொண்டனர்.

அரியலூரில் மாவட்ட காவல்துறை மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு அலகு சார்பில் போதை பொருள் இல்லா தமிழகத்தை உருவாக்கும் வகையில் நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியில் பள்ளி கல்லூரிகளை சேர்ந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணாக்கர் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

----------வாய்ஸ்----------

ராணிப்பேட்டை மாவட்டத்தில் போதை பொருள் இல்லா தமிழ்நாடு இலக்கை எட்டும் வகையில் 5 கிலோ மீட்டர் தூர விழிப்புணர்வு ஓட்டம் நடைபெற உள்ளதை முன்னிட்டு இதற்கான துண்டு பிரசுரங்களை ஆட்சித்தலைவர் பிரியா இன்று வழங்கினார்.

இந்த ஓட்டத்தில் பங்கேற்பவர்களுக்கு வழங்கப்பட உள்ள சீருடைகளையும் அவர் அறிமுகம் செய்தார்.

**************

சம்பத் குமார்

மதுரை வடக்கு வட்டம் சாத்த மங்கலத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் கீழ் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும் கல்லூரி மாணாக்கருக்கான சமூக நீதி விடுதி கட்டிட பணிகளை மாநில பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு.சம்பத் குமார் இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் ஒருபகுதியாக மாணாக்கருடன் கலந்துரையாடிய அமைச்சர் அவர்தம் கல்வி மற்றும் விடுதி சார்ந்த தேவைகள் குறித்தும் கேட்டறிந்தார்.

**************

ராஜ்குமார்

தர்மபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் மாநில வீட்டு வசதி நகர்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.பி.ராஜ்குமார் தலைமையில் அனைத்து துறை வளர்ச்சி பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் இன்று நடைபெற்றது.

மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சி பணிகள் குறித்து அமைச்சர் விரிவாக ஆய்வு மேற்கொண்டு, அதன் முன்னேற்றங்களை கேட்டறிந்தார்.

வளர்ச்சி பணிகளை விரைவாகவும் தரமாகவும் முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர அலுவலர்களை அவர் அறிவுறுத்தினார்.

**************

ஸ்டாலின்

தமிழக முதலமைச்சராக தாம் செயலாற்றியபோது அனைத்து மாவட்டங்களுக்கும் நேரில் சென்று ஆய்வு பணிகளை

மேற்கொண்டு மக்கள் நல திட்டங்களை செயல்படுத்தியதாக திமுக தலைவர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

திருவாரூரில் இன்று நிகழ்ச்சியில் பேசிய அவர், தாம் ஆட்சியில் இல்லாவிட்டாலும் மக்கள் நல பணிகள் தொடரும் என்றார்.

**************

இருவரி

கடலூர் அரசு மருத்துவமனையில் மாநில சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் பெண் குழந்தைகளை காப்போம் பெண்குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்டத்தின் கீழ் பெண் குழந்தைகளின் பெற்றோர்களுக்கு குழந்தைகள் நல பெட்டகம் மற்றும் மரக்கன்றுகளை ஆட்சித்தலைவர் திரு.சிபி ஆதித்யா இன்று வழங்கினார்.

தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டு கழகத்தின் மூலம் வழங்கப்படும் நெகிழி செயலாக்க இயந்திர இயக்குபவர் பயிற்சிக்கு நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்த தகுதியுடையோர் தாட்கோ இணையதளத்தில் பதிவு செய்துகொள்ளுமாறு ஆட்சித்தலைவர் திரு.மதுபாலன் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் பிளஸ் டூ பொது தேர்வு மதிப்பெண்களில் மறு கூட்டல் மறு மதிப்பீடு கோரி விண்ணப்பித்த தேர்வர்களின் பதிவெண் பட்டியல் இன்று வெளியிடப்படுவதாக அரசு தேர்வுகள் இயக்ககம் அறிவித்துள்ளது.

10 ஆம் வகுப்பு பொதுத்தேர்வு மதிப்பெண் மறு கூட்டல் மறு மதிப்பீடு ஆகியவற்றிற்கு விண்ணப்பிக்க இன்று ஒருநாள்

கூடுதல் அவகாசம் வழங்கப்படுவதாக அரசு தேர்வுகள் இயக்ககம் அறிவித்துள்ளது.

சிதம்பரம் அண்ணாமலை பல்கலைகழகத்தில் இளநிலை முதுநிலை பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகளுக்கான மாணாக்கர் சேர்க்கைக்கு விண்ணப்பிக்க வரும் 30ம் தேதி கடைசி நாளாகும்.

திருச்சி - சென்னை தேசிய நெடுஞ்சாலையில் காவிரி ஆற்றின் குறுக்கே உள்ள பழைய பால பராமரிப்பு பணிகள் காரணமாக, இதில் போக்குவரத்து இன்றுமுதல் தற்காலிகமாக தடை செய்யப்பட்டு மாற்று வழியில் வாகனங்கள் திருப்பிவிடப்படுகின்றன.

**************

கிரிக்கெட்

ஐ.சி.சி உலக கோப்பை மகளிர் 20-20 கிரிக்கெட் போட்டியில் மான்செஸ்டரில் இன்றிரவு 7 மணிக்கு இந்தியா - பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

இரவு 11 மணிக்கு பிரிஸ்டலில் தென்னாப்பிரிக்கா – நெதர்லாந்துடன் மோதுகிறது.

**************

பேட்மிண்டன்

U.S. ஓப்பன் பேட்மிண்டன் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு ஆடவர் பிரிவில் இந்தியாவின் கிடாம்பி ஸ்ரீகாந்த்தும்,

மகளிர் பிரிவில் Tanvi Sharma-வும் முன்னேறியுள்ளனர்.

**************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது